# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 யூன் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

**III.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**IV.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**V.** மனுக்கள்

**VI.** கேள்விகள் / இடைக்கால கேள்விகள்

**01.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்குற்பத்தி சுகாதாராம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2018.06.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/21)**

அ. i. மேல் மாகாணத்தினுள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட முழு வயல்கள் எவ்வளவு ஏக்கர்கள் ?

ii. அது மாவட்ட மட்டத்தில் எவ்வளவு ?

ஆ. i. மேல் மாகாணத்தினுள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பயிரிடப்படாது காணப்பட்ட முழு வயல்கள் எவ்வளவு ஏக்கர்கள் ??

ii. அது மாவட்ட மட்டத்தில் எவ்வளவு ?

இ. i. மேல் மாகாணத்தினுள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட முழு வயல்கள் எவ்வளவு ஏக்கர்கள் ?

ii. அது மாவட்ட மட்டத்தில் எவ்வளவு ?

**02.** **கௌரவ உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.06.05 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 02)**

அ. சமுத்ரதேவி வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டு வகுப்புக்கள் எத்தனை காணப்படுகின்றன ?

ஆ. அந்த முதலாம் வருட வகுப்பறைகளில் எத்தனை பிள்ளைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன ?

இ. இவ் வேளையில் அவ் வெற்றிடங்களில் எத்தனை நிரப்பப்பட்டுள்ளன ?

ஈ. அவ் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ள முறை யாது ?

உ. மிகுதியாக எத்தனை வெற்றிடங்கள் காணப்படுகின்றன ? அவ் வெற்றிடங்கள் எதன் அடிப்படையில் நிரப்பப்படும் ?

**03.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/23)**

அ. மேல் மாகாணத்தினுள் கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டிற்காக புதிதாக வழங்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு இணங்க வெவ்வேறாக எவ்வளவு ?

ஆ. அவை எந்த வீதி இலக்கங்களுக்குரிய பாதைகளுக்காக ?

இ. அந்த புதிய வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் மூலம் மேல் மாகாண சபையினுள் வீதிப் பயணங்களில் தொடர்ச்சியாக பிரச்சினை மிக்க நிலைமை காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அப் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரி யாது ?

உ. வீதிகளில் பஸ் மேலதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் இவ் வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. வீதிப் பயணங்களின் போது ஏற்பட்டுள்ள இப் பிரச்சினை மிக்க நிலைமையை தவிர்க்க உங்களுக்கு இயலுமா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/24)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 70/B கே சீ த சில்வா புரயில் கட்டான பிரதேச சபைக்கு உரிய காணியில் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையத்தின் முதலாவது கட்டடத்திற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு ? எந்த அமைச்சினால் ?

ஆ. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் சனசமூக நிலையத்தினை நிர்மாணிக்க பொறுப்பேற்ற ஒப்பந்தக் காரர் யார் ?

இ. அந்த நிர்மாணத்தை மேற்பார்வை செய்த தொழிநுட்ப உத்தியோகத்தரின் பெயர் என்ன ?

ஈ. அந்த சனசமூக நிலைய நிர்மாணத்தின் இரண்டாம் கட்டடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு ? எந்த அமைச்சினால் ?

உ. அந்த நடவடிக்கையை மேற்பார்வை செய்த தொழிநுட்ப உத்தியோகத்தரின் பெயர் என்ன ?

ஊ. அந்த ஆரம்பக் கட்டடத்தின் நிர்மாண நடவடிக்கை தரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

எ. மேற் கூறப்பட்ட கட்டடத்திற்கு உரிய நிர்மாணம் தொடர்பாக நீங்கள் விசாரணை ஒன்றை மேற்கொண்டு அந் நிர்மாணத்தின் உண்மை நிலைமையினை சபைக்கு முன்வைப்பீர்களா ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழிநுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/25)**

அ. மினுவாங்கொட வலயக் கல்வி காரியாலயத்தின் திவுலபிடிய ஞானோதய மத்திய மஹா வித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடமாகி எவ்வளவு காலம் சென்றுள்ளது என்பதனை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. உரிய பாடசாலையில் அதிபர் ஒருவர் இல்லாததன் காரணமாக நிர்வாகம் சீர் குலைந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. முன்னைநாள் அதிபருக்கு இடமாற்றம் வழங்கி பல மாதங்கள் கடந்துள்ள போதும் அப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை சட்ட ரீதியாக நியமிக்க முடியாமல் போனதற்குரிய காரணத்தை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. அப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்க நீங்கள் நடவடிக்கை ஒன்றினை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/26)**

அ. மெல்கோ ஒக்ஸிஜன் நிறுவனம் நடாத்தப்படும் வத்தளை மாபோல நகர சபைக்கு உரிய காணி 30 வருடத்திற்கு அத் தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பதனையும், இவ் வேளையில் 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளது என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இக் காணியை இவ் வேளையில் வத்தளை மாபோல நகர சபையினால் உரிய தாபனத்திற்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. பிரதேசத்தில் ஒரு பர்ச் ரூபா 45 இலட்சம், 50 இலட்சம் ஆகிய அளவுகளில் விற்கப்படுகின்ற போதும் உரிய காணியை மிகவும் குறைந்த விலையில் மெல்கோ நிறுவனத்திற்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. 161 பர்ச்களைக் கொண்ட இக் காணியை அவ்வாறு விற்பதற்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கையை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/27)**

அ. வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் மாபோலையில் இருந்து என்டேரமுல்லை வரையில் காணப்படும் (வெலிகடமுல்லை வீதியில்) அதிவேக வீதியின் மேம் பாலத்திற்கு அருகில் ஒரு பகுதி எதற்காக உடைத்து அகற்றப்படுகின்றது என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அவ்வாறு அப் பகுதியை உடைத்து அகற்றுவதற்காக யார் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அங்கீகாரம் வழங்கினார்கள் என்பதனையும், எதன் அடிப்படையில் என்பதனையும் நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அவ்வாறு அந்தத் துண்டு உடைத்து அகற்றப்படுவதன் கீழ் சிறிய அளவான வெள்ளத்தின் போதும் கூட பிரதேசமானது வெள்ளத்தில் மூழ்குவதற்கு இடமுண்டு என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அவ்வாறு அத் துண்டை உடைத்து அகற்றுவது தொடர்பாக பிரதேச மக்களின் எதிர்ப்பொன்று காணப்படுகின்ற படியால் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**08.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/28)**

அ. கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் கழிவகற்றுவதற்கு உரிய நிலையங்கள் (Pump Station) எத்தனை காணப்படுகின்றன ?

ஆ. குறித்த நிலையங்கள் எக் கால எல்லையினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன ?

இ. தற்போது கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் மக்களிடமிருந்து கழிவகற்றலுக்குரியதாக வரி ஒன்று அறவிடப்படுகின்றதா ?

ஈ. அவ்வாறான வரியினை அறவிடுவதற்கு கொழும்பு மாநகர சபையினால் திட்டமிடப்பட்டுள்ளதா ?

உ. அத் திட்டம் என்ன என்பதனை இச் சபைக்கு முன்வைக்க இயலுமா ?

**09.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/29)**

அ. கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் வாழும் மக்களிடமிருந்து கொழும்பு மாநகர சபையினால் அறவிடப்படும் வரிகள் என்ன ?

ஆ. அவ் வரிகளில் ஒவ்வொரு வரிகளுக்கும் உரியதாக கடந்த வருடம் (2017) சேகரிக்கப்பட்ட நிதியை வெவ்வேறாக காட்ட இயலுமா ? அப்படியாயின் அது எவ்வளவு ?

**10.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/30)**

அ. கொழும்பு மாநகர சபைக்கு உரிய மாநகர முதல்வரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மலசலகூட தொகுதியை பழுதுபார்ப்பது தற்போதைய நகரபிதா நியமிக்கப்பட்ட பின்னரா மேற்கொள்ளப்பட்டது ?

ஆ. அப்படியாயின் அதற்குரிய செலவு மதிப்பீட்டினை சபைக்கு முன்வைக்க இயலுமா ?

இ. செய்யப்பட்ட மறுசீரமைப்புக்கு இணைந்த வகையில் மதிப்பீடானது அதிகமானது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

தற்போது வளர்ந்தோர் தொடக்கம் சிறு பிள்ளைகள் வரை தொற்றாத நோய்களினால் பீடிக்கப்படுவதுடன் அந் நோய் விரைவாக பரவும் நிலைமையும் அதிகரித்துள்ளது. இந் நிலைமை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதற்கு காரணமாக இரசாயணப்பொருட்கள் அடங்கிய உணவுப் பாவனை மற்றும் தொழினுட்ப உபகரணங்களின் பாவனைக்கு பழக்கப்படுவதனால் மனித உடலுக்கு தேகப் பயிற்சி குறைவதே என இனங்காணப்பட்டுள்ளது. இந் நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள சிறுவர் பராயத்தினரை இவ் அழிவில் இருந்து மீட்டுக்கொள்ள மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சு பாடசாலை மட்டத்தில் வேலைத் திட்டம் ஒன்றினை நடாத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/02)**

**02.** **கௌரவ நிரோஷா அத்துகோரல அவர்கள்**

சுமார் முப்பது வருட காலமாக இலங்கையினுள் காணப்பட்ட பிரிவினை வாத பயங்கரவாதத்தின் காரணமாக ஒரு இலட்சம் அளவான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன், மிகவும் பாரிய பொருளாதார சமூக அழிவொன்றும் ஏற்பட்டது. அந்த பிரிவினை வாத பயங்கரவாதத்தின் காரணமாக இலங்கை அரசுக்கு செழிப்பான நாடொன்றாக அபிவிருத்தியின் பலாபலனை பெற்றுக் கொள்வதற்குரிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் போனதுடன், வெளிநாட்டு அரசாங்கங்களின் நிர்ப்பந்தங்களுக்கு கூட உட்பட வேண்டிய நிலைமை காணப்பட்டது. அந்த கெட்ட காலத்தை நிறைவு செய்து முற்போக்கான இலங்கை மக்களின் ஒத்துழைப்புடன் பிரிவினை வாத பயங்கரவாதத்தை தோல்வியடைய செய்வதற்கு முப்படையினருக்கும் பொலீஸாருக்கும் இயலுமாக இருந்தது. இந்த யுத்த நிலைமையின் காரணமாக மரணமெய்திய மற்றும் வாழ் நாள் முழுவதும் அங்கவீனர்களாகிய எமது பாதுகாப்பு படையினரையும் நிராயுதபாணிகளான சாதாரண சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம் மக்களை நினைவு கூறுவதற்காக ஆயுதம்

தாங்கிய பயங்கரவாதத்தை முழுமையாக தோற்கடித்த தினமாகிய மே மாதம் 18 ஆந் திகதியை தேசிய நல்லிணக்கத்தின் வீரர்களை கொண்டாடும் தினமாக பெயர் குறிப்பிட வேண்டும் எனவும், எந்தவொரு

இனத்திற்கும் பாதிப்பொன்றை ஏற்படாதபடி அந்த கொண்டாட்டத்தை சிறப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)18/03)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.06.06** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.